விருதுநகர் வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திரு.ச.உத்தண்டராமன், பி.எஸ்ஸி(விவ)

எண். ஆ3/8943/2019

நாள்:06.09.2021

பொருள் பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - 22.10.2009 அன்று அமரரான எஸ்.விநாயகமூர்த்தி, துணை தோட்டக்கலை அலுவலர் - வாரிசு / மகள் திருமதி.வி.சிவசசிரேகா அவர்களுக்கு கருணை அடிப்படையில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது - இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) ஆக 12.07.2019 முற்பகல் பதவியேற்றுக் கொண்டது - பணிவரன்முறை செய்திட ஆணையிடுதல் - தொடர்பாக

பார்வை
1. அரசாணை(நிலை)எண்165 (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ2) துறை நாள்: 30.08.2010
2. அரசாணை(நிலை)எண்.78 (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ1) துறை நாள்: 21.04.2017.
3. சென்னை, வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணிமேலாண்மை) அவர்களின் செயல்முறை ஆணை எண் : அநிபி.6/20778/2018, நாள் : 28.06.2019.
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்: ஆ3/8943/2019, நாள்: 09.07.2019.
5. அருப்புக்கோட்டை, வேளாண்மை உதவி இயக்குநர் அவர்களின் மே.கு.எண்: 72/2019, நாள்:12.07.2019-ன்படி வரப்பெற்ற திருமதி.வி.சிவசசிரேகா, இளநிலை உதவியாளர்(பி.அ) பணியேற்பு கடித நாள்: 12.07.2019.
6. அரசாணை(நிலை)எண் .48 (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ1) துறை நாள்: 26.02.2021
7. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண்: அநிபி1/19811/2020, நாள்: 21.04.2021.

*****

**ஆணை:-**

பார்வை (3)ல் கண்டுள்ள செயல்முறை ஆணையின்படி, விருதுநகர் மாவட்டம் தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தின்கீழ் துணை தோட்டக்கலை அலுவலராகப் பணிபுரிந்து திரு.எஸ்.விநாயகமூர்த்தி பணியிலிருக்கும்பொழுது 22.10.2009 அன்று மரணமடைந்த அமரர் திரு.எஸ்.விநாயகமூர்த்தி அவர்களின் வாரிசு/மகள் திருமதி.வி.சிவசசிரேகா அவர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிஅ) ஆக பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு விருதுநகர் மாவட்டம், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டில் உள்ள அருப்புக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பி.அ) ஆக 12.07.2019 முற்பகல் முதல் பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை(1)-ல் காணும் அரசாணை மற்றும் பார்வை(2)-ல் காணும் அரசாணை பத்தி 9.4-ல் வழங்கப்பட்ட தெளிவுரைகளின்படியும், விண்ணப்பம் அளித்த நாளில் தனியருக்கு திருமணமாகி உள்ளதாலும் இளநிலை உதவியாளர் பதவிக்கு உரிய அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்துள்ளார். பார்வை (6)ல் காணும் அரசாணையில் பத்தி எண்.5.1-ல் கண்டுள்ள அறிவுரைகளின்படி, 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு எவ்வித விதித்தளர்வும் (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Govt.Orders) தேவைப்படாத அனைத்துப் பணியாளர்களின் பணி நியமனம் நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு வரன்முறைப்படுத்தி ஆணையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அதன் அடிப்படையில் அருப்புக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் 12.07.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பி.அ) ஆக பணிபுரியும் திருமதி.வி.சிவசசிரேகா அவர்கள் அமைச்சுப்பணி விதிகளில் இளநிலை உதவியாளர் (பி.அ) பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி, வயது வரம்பு மற்றும் உடற்தகுதி பெற்றுள்ள நிலையில் தனியருக்கு எவ்விதமான விதித்தளர்வும் தேவைப்படாத நிலையில் விருதுநகர், தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தின் கீழ் துணை தோட்டக்கலை அலுவலராகப் பணிபுரிந்து திரு.எஸ்.விநாயகமூர்த்தி பணியிலிருக்கும் பொழுது 22.10.2009 அன்று மரணமடைந்த அமரர் திரு.எஸ்.விநாயகமூர்த்தி அவர்களின் வாரிசு / மகள் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்று அருப்புக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் 12.07.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பி.அ) ஆக பணிபுரியும் திருமதி.வி.சிவசசிரேகா அவர்களின் பணியினை கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது

| வ. எண் | பெயர் / பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளர் (பி.அ) ஆக பணியேற்ற நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திருமதி.வி.சிவசசிரேகா, இளநிலை உதவியாளர் (பி.அ) வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், அருப்புக்கோட்டை. | 12.07.2019 முற்பகல் | 12.07.2019 முற்பகல் |

மேலும், திருமதி.வி.சிவசசிரேகா, இளநிலை உதவியாளர் (பி.அ) அவர்கள் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் ஈராண்டு தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்யப்படல் வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

வேளாண்மை இணை இயக்குநர்,
விருதுநகர்.

பெறுநர் :

திருமதி.வி.சிவசசிரேகா,
இளநிலை உதவியாளர்(பி.அ),
வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், அருப்புக்கோட்டை

நகல் : வேளாண்மை உதவி இயக்குநர், அருப்புக்கோட்டை.

நகல் : சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. (அநிபி 1- பிரிவு)

நகல் : பணிப்பதிவேடு

நகல் : இருப்புக்கோப்பு

உபரி -1